**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**EP.44/2023 in OS.21/2011**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.04.2026 | | |
| பெயர்: | திருமால்<br>(PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | ராமையன் |
| கிராமம்: | புதுப்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தனியார் பணி | வயது : | 61/2026 |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :16.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.42)**

1. அசல் வழக்கு எண்.21/2011 ல் முதல் வாதி ராமையன் எனது தகப்பனார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ரவி எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். அசல் வழக்கை நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்ட தேதி என்பது 02.01.2012 ஆகும். நான் இந்த நிறைவேற்று மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது 31.10.2023 என்றால் சரிதான்.

2. நான் 11 வருட காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தான புல எண்.218/1ல் 0.78 சென்ட் இடத்தில் எதிர்மனுதாரர் கொட்டகை மற்றும் பம்புசெட் அமைத்து 14 வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து மயிலாடுதுறை செல்லம்மாள் எஸ்டேட்க்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா தர்மலிங்கத்துக்கு செல்லமாள் எஸ்டேட் சார்பில் நேரடியாக

குத்தகைக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தகப்பனார் ராமையாவுக்கு கொடுக்கப்பட்டது.

3. மேற்படி எனது தகப்பனாரிடம் கொடுக்கப்பட்ட குத்தகை உரிமைக்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாருக்கு எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதி மாற்றி கொடுக்கப்பட்டது என்றால் 1969ம் வருடம் இருக்கும், மாதம், தேதி ஞாபகம் இல்லை. தர்மலிங்கத்திற்கு ராமையா, தங்கசாமி, கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவர் மட்டும் வாரிசுகள் ஆவார். மேற்படி மூவரில் கிருஷ்ணமூர்த்தி மட்டும் தான் தற்போது உயிருடன் உள்ளார். மற்ற இருவர் காலமாகிவிட்டனர்.

4. எனது தாத்தா காலமான வருடம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை கடந்த 14.07.1999 ல் எனது தகப்பனாருக்கும், எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கும் ஊர் பஞ்சாயத்தின் சார்பில் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தங்கசாமி அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவ்வாறு பிரித்து கொடுக்கப்பட்ட தாவா சொத்தை அவரது மருமகளும், எதிர்மனுதாரரின் மனைவியுமான வசந்தலெட்சுமிக்கு உயில் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. மேற்படி பிரித்து கொடுக்கப்பட்ட தாவா சொத்தை கோரி வசந்தலெட்சுமி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.107/2022 வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யாக போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது நீதிமன்றத்தை ஏமாற்றி போர்ஜரியாக பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தி தாவா சொத்தை தர்காஸை சேர்ந்த கோவிந்தசாமி என்பவருக்கு எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

6. கடந்த 23.09.2020 ல் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து பிரவேசித்து கொட்டகை போட முயற்சி செய்து அடித்ததாக கூறியுள்ள நான் என்று மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் அன்றைய தினமே

மருத்துவமனையில் சேர்ந்தேன். எந்த தேதியில் எந்த நேரத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் கடந்த 23.09.2020ல் காலை 11.00 மணியளவில் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார் சம்பந்தமாக போலீசார் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் மருத்துவமனையில் காவல் நிலையத்தார் வந்து என்னை விசாரணை செய்து பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர்.

7. நான் தான் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தகப்பனாரை தாக்கினேன் என்றும், அது சம்பந்தமாக புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் கூறினால் சரியல்ல. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருக்கும், அவரது தகப்பனாருக்கும் எதிராக குற்ற வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளது.

8. நான் காயம்பட்டதாக கூறுவதற்கு ஆதாரமாக காயச்சான்று ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.02)**